விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 041 வள்ளுவர் ஆண்டு 2053 தை 16 சனிக்கிழமை (29.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### கோட்டாவின் கைக்கூலியாக முன்னணி செயற்படுகின்றது

# ஒற்றையாட்சி அரசியல் சாசனத்தை தமிழினம் என்றும் ஏற்காது

### தமிழ்த் தேசிய கட்சிகள் கூட்டாக அறிவிப்பு

- அதிகாரப்பகிர்வு கிடைக்கும்வரை அதிகார பரவலாக்கலை பெறுவதற்கு முயற்சிக்கப்படும்.
- கோட்டா அரசு நினைப்பதை முன்னணி வடக்கில் நிறை வேற்றுகின்றது.
- 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு தராது என்பதில் தெளிவாக இருக்கின்றோம்.
- சமஷ்டி கட்டமைப்பில் சுயநிர்ணய தீர்வைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம்.



13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள், இந்திய பிரதமர் மோடிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பில், தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

**விக்னேஸ்வரன்**

எம்மிடம் ஒரு முனை மழுந்த மண்வெட்டி உள்ளது. புது மண்வெட்டி வருவதற்கு காலம் எடுக்கும்.

இந்த நிலையில், இந்த பழைய மண்வெட்டியை பயன்படுத்தி என்றாலும் சிறிய வேலையை செய்ய வேண்டும். புதிய மண்வெட்டி வரும் வரும் என்று இருப்பதில் அர்த்தம் இல்லை.

இதைப்போலத்தான் 13 ஆவது திருத்தம். தமிழ் மக்களின் பிரச்சினைகள் இதன்மூலம் தீர்க்கப்படாது. ஆனால் சிறிய சிறிய அலுவல்களை பார்த்துக்கொள்ள முடியும் என்று தான் கூறுகின்றோம்.

நாம் இப்போது இருக்கும் நிலையில் இராணுவ ஆட்சி வடக்கு-கிழக்கில் அதிகரிக்கிறது. சிங்கள குடியேற்றம் நடைபெறுகிறது.

நாம் ஒன்றுமே செய்ய முடியாமல் நிற்கிறோம். இதற்கு இருக்கும்சட்டம்ஒன்றை நடைமுறைக்கு 15

## முன்னணி என்ன புரண்டாலும் தமிழர்களை ஏமாற்ற முடியாது

### ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்னதான் புரண்டாலும் தமிழ் மக்களையும் புலம்பெயர் தமிழ் மக்களையும் ஏமாற்ற முடியாது என தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் கட்சிகள், இந்திய பிரதமர் மோடிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பில், தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 15

## 13 நிரந்தர தீர்வு அல்ல கூட்டு சமஷ்டியே எமக்கான தீர்வு

### நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

எங்களது நிரந்த தீர்வு சமஷ்டி முறையானது அல்லது கூட்டு சமஷ்டியானது என முன்னாள் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்கள் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் 04

## கொரோனா 17 பேர் பலி

(கொழும்பு)

கொரோனா தொற்றால் நாட்டில் மேலும் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரி 16

### ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஐ நிராகரிப்போம்

## முன்னணி யாழில் நாளை பேரணி

(யாழ்ப்பாணம்)

ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஐ நிராகரிப்போம் என்ற தொனிப் பொருளில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் யாழில் நாளை மாபெரும் பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை 13ஆம் திருத்தத்திற்குள் முடக்கும் முயற்சியை முறியடிக்க அனைவரும் ஒன்றுபடுமாறு 15




## நாட்டில் மேலும் +961 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 961 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் கோவிட் தொற்றுக்கு 16

## அறிகுறியற்ற தொற்றாளர்கள் பலர் சமூகத்தில் உள்ளனர்

### மருத்துவர் ஹேமந்த ஹேரத்

(கொழும்பு)

அதிக எண்ணிக்கையிலான அறிகுறியற்ற கோவிட்-19 தொற்றாளர்கள் சமூகத்தில் பரவலாக உள்ளனர் என்று சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் 15

## உயர்தர பரீட்சையை ஒத்தி வைக்குக

### நீதிமன்றில் மனு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை ஒத்தி வைக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதி 02

## சட்டத்திருத்தத்தின்போது குறைகளை கண்டறியுங்கள்

### இலங்கையிடம் ஐ.நா. வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் சட்டத்திருத்தங்களை மேற்கொள்ளும்போது விரிவான கலந்துரையாடல்களை நடத்தி, குறைபாடுகளையும் தீர்வுகளையும் கண்டறிய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹன்னா சிங்கர், ட்விட்டர்பதிவொன் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோவில் வீதியில் 6 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

**(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 Km தூரம்)**

**தொடர்பு:- 077 658 5999**

(9911)

## வேலை வாய்ப்பு

- முன்பள்ளி ஆங்கில, தமிழ், கணித ஆசிரியர். (முன்பள்ளி Diploma முடித்தவர்கள்/ பழக விரும்புபவர்கள்)
- சிங்கள எழுத்துப் பயிற்சி ஆசிரியர்.
- ஆடல், பாடல் தெரிந்த அறிவுசார்ந்த கல்வியை ஊட்டுபவர்கள் அனுபவமுள்ளவர்கள் மட்டும்.
- முன்பள்ளி இணைப்பாளர்.
- MS Office, Photoshop தெரிந்தவர்கள்/ பழக விரும்புபவர்கள்
- VTA நிறுவனத்தில் முன்பள்ளி Diploma முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தமிழ், ஆங்கில, கணித ஆசிரியர்கள் முன்பள்ளி Diploma கற்கைநெறியுடன் பணியாற்ற முடியும்.**

நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி : 30.01.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி - 12.00 மணிவரை நடைபெறும்.

- மல்லாகம், தெல்லிப்பளை, இணுவில், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.
- நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கும்போது உரிய ஆவணங்களுடன் வருகைதருதல் வேண்டும்.

நேர்முகத் தேர்வுக்குரிய இடம்

**Little Masters' Montesoori**

கே.கே எஸ் றோட், மல்லாகம்.

தொடர்புகளுக்கு : 077 377 0524

(9871)


## உயர்...

மன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமூக செயற்பாட்டாளர் நாகானந்த கொடித்துவக்கு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

எதிர்வரும் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வுள்ள குறித்த பரீட்சையினை 20 வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு கோரியே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில், கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன, கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (ம)


## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனி பகுதியில் 18 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**1 பரப்பின் விலை - 3.5 லட்சம்**

**(மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்)**

**15 அடி பாதையுடன், காபற் றோட், நல்ல சூழல், நிலப்பரப்பு**

(அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 Km தூரம்)

(அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கம்பனி முன்வீதியில்)

தொடர்பு:-

**076 890 9259, 077 015 0353**

(9912)


## பொதுக்கூட்ட அறிவித்தல்

எமது சங்கத்தின் 60 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் 30.01.2022 ஞாயிற்றுக்கிழமை **'யாழ். போதனா வைத்தியசாலை சுயாஸ் மருத்துவ சிகிச்சை'** பிரிவில் காலை 9.30 மணிக்கு நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பா. பாஸ்கரன்
செயலாளர்

யாழ்.செள.சே.கூ.சங்கம்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

(9890)

## ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24 - 12 - 1926

இறப்பு 09 - 02 - 2021

*அமரர்*

## அப்பாத்துரை சாம்பசிவம்

*திதி- 30.01.2022 திரயோதசி*

கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதை விட்டகலாது. நாளை (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை எமது தந்தையாரின் முதலாவது ஆண்டு திதியை முன்னிட்டு கீரிமலையில் கிரியைகள் இடம்பெற்று அன்றைய தினம் மதியம் ஒரு மணியளவில் மதியபோசனமும் இடம்பெறவுள்ளது.

எனவே உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மகன் சா.ஜனகன் (கனடா) 00141635707594

மகள் ர.கௌதமி (ஜேர்மனி) 004915144938415

(9905)

## மரண அறிவித்தல்

## வீரகத்திப்பிள்ளை இராமநாதன்

(கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பூர்வீக தர்மகர்த்தாவும் முன்னாள் தலைவரும்)



கிளிநொச்சி பழைய கமம் முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை இராமநாதன் 27.01.2022 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை (ஐங்கரப்பிள்ளை, கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பூர்வீக தர்மகர்த்தாவும் பிரதம பூசகரும்) - பரமேஸ்வரியின் (அருணாசலம் உடையாரின் மகள்) சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற முருகேசு (உடையார்) - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் நிலாம்பிகையின் அன்புக் கணவரும் யசோதா (லண்டன்), திஸந்தா (புளியம்பொக்கணை), றேனுகா (பிரான்ஸ்), நிலாயினி (பெரியகுளம்), பிரியதர்சினி (புளியம்பொக்கணை) ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்வரன் (லண்டன்), சுபாஸ்கரன் (அவுஸ்திரேலியா), கோடீஸ்வரன் (பிரான்ஸ்), சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜா குருக்கள் (ஸ்ரீ ஐயா வன்னி பிராந்திய குருமார் ஒன்றியத் தலைவர்), இராகவன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலகிருஷ்ணன் (லண்டன்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), நாகேஸ்வரி (ஆசிரியை - கிளி/பாரதி வித்தியாலயம்), காலஞ்சென்ற ரஞ்சித்குமார், தயதீஸ்வரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுப்பிரமணியம் (வரணி), சிவராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற துரைராசா, கமலாம்பிகை (லண்டன்), புஸ்பராசா (சுவிஸ்), ஜெயராசா (வரணி), ஆனந்தராசா (வரணி) உதயராசா (லண்டன்), மீனாம்பிகை (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திலக்சன், பதுசனன், கவிஸ்னன், மதுமிசா, கிஷோர், தரணிகன், ஸ்ரீ பிரணவன், ஸ்ரீ வைஷ்ணவன், ஸ்ரீ அபிஸ்ணவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று நாளை (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியவில் புளியம்பொக்கணை நெடுமோட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

076 388 0125 (சகோதரி)
077 959 0199 (மருமகன்)


தகவல்:
குடும்பத்தினர்

(C-3659)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன

## இதை ஏற்க முடியாது என்கிறார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்



(திருமலை)

**மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் மாகாண சபைகள், நகர சபைகள் இயங்குவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் தேர்தல் ஒன்றை முன்னெடுக்கும் போது முன்னேற்பாடாக செயற்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலை பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அதிகாரிகளின் நிர்வாகத்தில் மாகாண சபைகள் இயங்குவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இக்காலகட்டத்தில் மாகாணசபைத் தேர்தல் இடம்பெற வேண்டுமாயின் அதற்கான முடிவு பாராளுமன்றத்திடம் இருக்கிறது. பாராளுமன்றம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் ஆக இருந்தால் உடனடியாக தேர்தலை நடத்த தயாராக உள்ளோம் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜீ.ஹேவா குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மாகாண சபைகள் தற்போது இயங்குகின்றன. மாகாண சபைகள் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க அமைச்சு இருக்கின்றது. அந்த அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. அதேபோன்று மாகாண சபைகளுக்கு என அரசாங்கத்தினால் தனியாக நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறான கட்டமைப்புக்களின் செயற்பாடுகளின் ஊடாக மாகாண சபைகளில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு இல்லாமல் அதிகாரிகளினால் இந்த மாகாண சபைகளின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகி உள்ளது. இந்த நிலையில் தேர்தல் ஆணைக்குழு இணக்கம் வெளியிடப் போவதில்லை.

மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டிய இடத்திற்கு பதிலாக அதிகாரிகள் நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எங்களின் தொடர்ச்சியான கோரிக்கையாக உள்ளது எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்

## அதுவரை எமது குரலை நிறுத்த முடியாது

## மனோ கணேசன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டம் மீள் திருத்தப்படும் வர்த்தமானி பிரகடனம் வெளியாகியுள்ளது. ஐ.நா.மனித உரிமை ஆணையகத்தை, ஐரோப்பிய ஜி.எஸ்.பியை நோக்கி, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், இதை வேறு வழியில்லாமல் அறிவித்துள்ளார். எனினும் இதுவும் ஒரு முன்னேற்றம் தான். ஆனால், இச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்ற எமது குரலை நாம் நிறுத்திவிடக்கூடாது.

இலங்கை அரசியலை இன்னமும் சரியாக புரிந்து கொள்ளாத அரசியல் குழந்தைகளுக்கும் இது சமர்ப்பணம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். அதற்கான காலம் இன்று கனிந்து விட்டது. அவசர நிலைமைகளுக்கு சாதாரண சட்டங்களே போதும். அதி அவசரம் ஏற்படுமானால், சடுதியாக இந்த சட்டத்தை மீள உடன் கொண்டும் வரலாம். ஒரே நாளில் அரசியலமைப்பு திருத்தங்களையே கொண்டு வந்தவர்களுக்கு இது பெரிதல்ல.

ஆனால், இன்று சட்ட புத்தகங்களில் இருந்து இச்சட்டம் முழுமையாக அகற்றப்படுவது அவசியம். ஏனெனில் போர் முடிந்து பத்து ஆண்டுகள் ஆன பிறகும் அமுலில் இருக்கும் இச்சட்டம் ஏற்கனவே கணிசமான துன்புறுத்தல்களை தந்து கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக தமிழ் பேசும் மக்களை நோக்கி இது பாய்கிறது.

இந்த அரசு மட்டுமல்ல, எந்த இலங்கை அரசும் முழுமையாக இச்சட்டத்தை நீக்க முன்வரவில்லை.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் மீள திருத்தப்படுகிறது என்ற வெளிவிவகார அமைச்சரால், ஜனவரி 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி பிரகடனம், எமக்கு ஒரு அடிப்படை உண்மையை மீளவும் எடுத்து உரைக்கிறது.

ஐ.நாவோ, அமெரிக்காவோ, ஐரோப்பிய யூனியனோ, இந்தியாவோ, ஏதாவது வெளி சக்திகள் சொன்னால்தான் இந்த அரசு கொஞ்சமாவது நகருகிறது. இதுதான் இங்கே கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் என அவர் தெரிவித்தார். (நி-5)




மணிவிழா வாழ்த்து

திருமதி.சுசிகலா மணிவர்ணன்- SLTS I

ஆசிரியை

யா/துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பாடசாலை




ஆசிரியர் சேவைதனில்
வரலாற்றுத் தடம் பதித்து
நிர்வாகம், கற்பித்தல் நுட்பம்
வழிகாட்டும் பாங்கு – என
பன்முகம் காட்டிய மணிவிழா நாயகியை
வாழ்த்துகின்றோம்.

இன்றைய தினம் 29.01.2022 அகவை அறுபதினை அடைந்து நேற்றைய தினத்தில் இருந்து தன்னுடைய 33 வருட ஆசிரிய சேவையில் இருந்து சிறப்புற ஓய்வு பெறும் எங்களுடைய சின்னத்தையை என்றும் ஆலடிப்பால கணபதியின் அருட்கடாட்சம் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மருமக்கள்-வி.செந்தூரன், வி.குமரன்,
வி.துவாரகன்.

"சாரதா" அல்வாய்.

(C-3656)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aayanaham.org

# இலங்கையை வீழ்த்தியது ஆப்கான்

ஜூனியர் உலக கிண்ண போட்டிகள் மேற்கிந்தியத்தீவுகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், குரூப் சி பிரிவில் 2 ஆம் இடம் பிடித்த ஆப்கானிஸ்தான் அணியும், குரூப் டி பிரிவில் முதல் இடம் பிடித்த இலங்கை அணியும் மோதின. டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பட் செய்த ஆப் கானிஸ்தான் அணி 47.1 ஓவரில் 134 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. அப்துல் ஹாதி 37 ரன்னும், நூர் அகமது 30 ரன் னும் எடுத்தனர்.

இலங்கை அணி சார்பில் வினுஜா ரான்பால் 5 விக்கெட் வீழ்த்தி அசத்தினார். இதையடுத்து, 135 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங் கியது. ஆப்கானிஸ்தான் அணியினரின் அசத்தலான பீல்டி ங்கில் இலங்கை அணி சிக்கியது.

இலங்கை அணியில் துனித் வெல்லலகே அதிகபட்சமாக 31 ரன் எடுத்தார். 45 ஆவது ஓவரில் வெற்றிக்கு 11 ரன்கள் தேவைப்பட்ட நிலையில் இலங்கை அணி 6 ரன்களை மட்டுமே எடுத்து ஓல் அவுட்டானது. இதன்மூலம் ஆப்கானிஸ்தான் 4 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (4-6)

## 13 நிரந்தர...

தெரிவித்ததாவது,

இந்தியாவுடன் பேசி 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வட மாகாண சபையை கொண்டு வர நாங்கள் ஆயத்தங்களை செய்யும்போது அவர்கள் அதற்கு எதிராக பொய் பேசும் கூட்டங்களை நடத்த தொடங் கியுள்ளனர். அதாவது வட மாகாண சபை விரைவிலே வரும் நாங்கள் அதிலே பங்குப்பற்ற வேண்டும். இப்போதிலிருந்தே நாங்கள் இந்த பொய்களை சொல்லிக் கொண்டு வந்தால்தான் மற்றவர்களுக்கு மேலாக எங்கள் மக்களிடம் அந்த பொய்யை உண்மையாக்க முடியும் என்ற எண்ணத்திலே அவர்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்.

உண்மையிலே 13ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களுக்கு ஒரு நிரந்தர தீர்வு அல்ல. அதிலே சைக்கிள் கட்சியாக இருந் தால் என்ன? எங்களது கட்சியாக இருந் தால் என்ன? அதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை என்றார். (ம-18.33)

# துடுப்பாட்டப் போட்டி
## மானிப்பாய் இந்துக்கல்லூரி வெற்றி



யா/மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கும் இடையிலான மட்டுப்படுத்தப் பட்ட 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பா ட்டப் போட்டியில் யா/மானிப்பாய் இந்து க்கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோரி யாக் கல்லூரி அணி 33.5 ஓவர்களில் 82 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை யும் இழந்தது.

சிறப்பாகப் பந்து வீசிய மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரன் ரி.சுஜீவதாஸ் 26 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெ ட்டுக்களைக் கைப்பற்றினார்.

83 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் 24 ஓவர்கள் முடி வில் 1 விக்கெட்டை மாத்திரமே இழந்து குறித்த இலக்கினை அடைந்தனர்.

இதில் வி.சாருஜன் 20 ஓட்டங்களை யும், எம்.தெய் வீகன் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்றனர். (4-6-64)

# இறுதிப்போட்டிக்கு முன்னேறினார் நடால்

மெல்பேர்னில் நடந்த அவுஸ்திரேலிய ஓபன் அரை யிறுதி போட்டி யொன்றில் ஏழாம் நிலை வீரரான இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினியை வீழ்த்தி, ரபேல் நடால் இறு திப் போட்டிக்கு நுழைந்துள்ளார்.

மெல்பேர்னின் "Rod Laver Arena" அரங்கத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 35 வயதான ஸ்பெயின் வீரர் நடால் 6-3, 6-2, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் மேட்டியோ பெரெட்டி னியை வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் நடால் நாளை ஞாயிற்றுக்கி ழமை நடைபெறும் இறுதிப் போட்டியில் டேனியல் மெட் வெடேவ் அல்லது ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் ஆகியோருடன் அவு ஸ்திரேலிய இறுதிப் போட்டியில் மோதுவார்.(4,6)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி ரகுணா சிவகுமரன்**

அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் **இராமலிங்கம் ஐங்கரலிங்கம்**

(ஓய்வுநிலை அதிபர்)

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் - 08.10.1953

மறைவு - 07.01.2022

ஆசிரிய சகோதரத்துவம்

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(C-3660)

# ஆழ்ந்த இரங்கல்

பிறப்பு 15 . 06 . 1957



இறப்பு 27 . 01 . 2022

கரைச்சி புளியம்பொக்கணை ஆலய பரம்பரை வழித்தோன்றிய தர்மகர்த்தாவும் பிரதம பூசகருமாகிய **நாகமுத்து வீரகத்திப்பிள்ளையின்** சிரேஷ்ட புதல்வனும் எமது ஆலயத்தில் நீண்டகாலம் தலைவராக இருந்து ஆலய வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிய

**வீரகத்திப்பிள்ளை இராமநாதன்**

**(கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பூர்வீக தர்மகர்த்தாவும் முன்னாள் தலைவரும்)**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல புளியம்பொக்கணை நாகதம்பிரான் அருளை இரங்கி நிற்கின்றோம். அத்தோடு அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(C-3658)

தர்மகர்த்தா சபையினரும் ஆலய பரிபாலன சபையினரும்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்

# மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 09 . 1942



இறப்பு 27 . 01 . 2022

**கதிரவேலு தம்பித்துரை**

கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட கதிரவேலு தம்பித்துரை அவர்கள் கடந்த 27.01.2022 (வியாழக்கிழமை) அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று (28.01.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பார்வதி இல்லம்,
வீரபத்திரர் கோவில் வீதி, கோண்டாவில். (9909)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் ஆண்டு நினைவு நாள்



அமரர்.


## பொன்னையா பாலசிங்கம்

( முன்னாள் கிராம சபைத் தலைவர்- புதுக்குடியிருப்பு )

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1933.03.10 | 2021.02.08 |

திதி- துவாதசி தேய்பிறை

எமது குடும்பத்தின் குலவிளக்காய்
அமரத்துவம் அடைந்து
ஓராண்டு சென்றாலும்
நினைவுகளும்
வலிகளும்
மறையவில்லை
அன்பினால் பண்பினால்
குணத்தினால்
ஆளுமையால்
எம் அனைவரது
உள்ளத்திலும்
ஆழமாய் குடியிருந்து
விடைபெற்று
சென்றதேனோ...?
ஆலமர விழுதுகள்
போல் உன்
ஆயிரம் உறவுகள்
இன்று உன் பிரிவால்
தவிக்கின்றோம்...



(சி-3657)

4ம் வட்டாரம்
இரணைப்பாலை வீதி,
புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்.

# இலங்கை- இந்திய புரிந்துணர்வானது இருதரப்பு உறவை துரிதமாக வலுப்படுத்தும்

## இந்திய வெளியுறவுகள் அமைச்சர் ஜெய்சங்கர்

(டில்லி)

இலங்கை மற்றும் இந்திய மக்களின் ஆழமான உறவினால் வலுவூட்டப் பட்டிருக்கும் தலைமைத்துவங்களு க்கிடையிலான புரிந்துணர்வானது, இரு நாடுகளுக்குமிடையிலான உறவை மேலும் துரிதமாக வலுவடையச் செய் யும் என்று இந்திய வெளியுறவுகள் அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்தியாவின் 73 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்திய இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்வில் காணொலி மூலம் கலந்து கொண்ட போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மைய காலத்தில் இரு நாடுக ளுக்கும் இடையிலான நெருக்கமான பொருளாதார ஒத்துழைப்பை இந்தியா வும் இலங்கையும் இலக்காகக் கொண் டிருப்பதுடன் ஒரு விசேடமான உற வினையும் இரு நாடுகளும் பகிர்ந்து கொண்டிருப்பதாகவும் இரு நாட்டு மக்க ளினதும் ஆழமான உறவினால் வலு வூட்டப் பட்டிருக்கும் தலைமைத்துவங் கள் இடையிலான புரிந்துணர்வு கார ணமாக இருதரப்பு உறவானது மேலும் துரிதமாக வலுவடையும் என்ற நம்பிக் கையையும் அவர் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வருடாந்தம் 600 மில்லியன் பிளாஸ்டிக் கரண்டிகள் பயன்பாட்டில்

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுச்சூழலில் வரு டாந்தம் சுமார் 600 மில்லியன் பயன்ப டுத்தப்பட்ட பிளாஸ்டிக் கரண்டிகள் வீசப்படுவதாக சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஒரு மாதத்திற்கு சுமார் 50 மில்லியன் பிளாஸ்டிக் கரண்டிகள் பயன்பாட்டிற்குப் பிறகு சுற்றுச்சூழலுக்கு விடப்படுகிறன.

குறிப்பாக தயிர், ஐஸ்கிரீம் போன்ற உணவுப் பொருட்களுக்காக பிளாஸ்டிக் கரண்டிகள் பெரும்பாலும் நுகர்வோ ருக்கு வழங்கப்படுகிறன. இவை சுற்றுச் சூழலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்து பவை. இதே அளவு பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்களும் சுற்றுச்சூழலுக்கு விடப்படுகிறன.

எனவே பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக உக்கலடையும் இயற்கை பொருட்களை பயன்படுத்துவதில் சிறப்பு கவனம் செலு த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்தார். (நி-5)

# கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவில் நியமன முன்பதிவுகளுக்கு 1919

(கொழும்பு)

வெளிநாட்டு அமைச்சின் கொன்சி யூலர் விவகாரங்கள் பிரிவில் நியமன முன்பதிவு முறைமைக்கான 1919 தொலைபேசி அழைப்பு சேவை அறி முகம் செய்யப்பட்டுள்ளது.

கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவில் நடைமுறைகளை நெறிப்படுத்தி, நாளா ந்தம் பிரிவுக்கு வருகை தரும் பொது மக்களுக்கு உதவும் நோக்கத்துடன், மின்னணு ஆவண சான்றளிப்பு முறைமை (eDAS) மூலம் சான்றி தழ்கள் / ஆவணங்களை சான்றளி த்துக்கொள்ள விரும்பும் பொது மக்களு க்காக, நடைமுறையில் உள்ள நேரடி யாக வருகை தரும் நடைமுறைக்கும் மேலதிகமாக, அரசாங்க தகவல் நிலை யத்துடன் (1919 அழைப்பு நிலையம்) இணைந்து நியமன முன்பதிவு முறை மையொன்றை அமைச்சு அறிமுகப்படு த்தியுள்ளது. (நி-5)

# இராசிபலன்

29.01.2022
தை 16, சனிக்கிழமை
துவாதசி முன்னிரவு 6.27 மணிவரை

மூலம் பின்னிரவு 1.06 மணிவரை
சுபநேரம் -3.36-5.06 மணிவரை
இராகு காலம் -9.36-11.06 மணிவரை

சந்திராஷ்டமம்- கார்த்திகை
சனிப்பிரதோச விரதம்

வளவன்

**மேஷம்**: வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர் வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆன ந்தம் கூடும் நாள்.

**கடகம்**: உறவினர்களின் சந்திப் பால் உள்ளம் மகிழ் வீர்கள், பொல்லாதவர் கள் உங்களை விட்டு விலகுவர், செயற்பாடு களில் உற்சாகம் காட்டுவீர்கள், பொது நல ஈடுபாடு அதகரிக்கும்.

**துலாம்**: நீண்ட நாளைய விரு ப்ப மொன்று நிறை வேறும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் ஒத்துளைப்புக்கள் கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**மகரம்**: குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல் லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**ரிஷபம்**: பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படா மல் பார்த்துக் கொள் வது நல்லது, உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**சிம்மம்**: பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்-பெற லாம், எண்ணங்கள் எளி தில் நிறைவேறும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழி யில் பெருமைகள் கிடைக்கும்.

**விருச்சிகம்**: தொழில் வளர்ச்சி கூடும் நாள், அனைத்திலும் வெற்றி பெற கண் ணனை வழிபட வேண்டிய நாள், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், வாக்குமேன் மையுண்டு.

**கும்பம்**: செவி குளிரும் செய்தி கள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், எடுத்த காரிய ங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்ற முண்டு.

**மிதுனம்**: ஆசைப்பட்ட பொரு ளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர் கள் நம்பிக்கைக் குரி யவர்களாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் , போசன சுகமுண்டு.

**கன்னி**: கொள்கைப் பிடிப் போடு செயற்படுவீர்கள், கடன் சுமைகுறையும் வாய்ப்புண்டு, குடும்ப த்தில் சுகங்களும், சந்தோ சங்களும் அதிகரிக்கும், சுப நிக ழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**தனுசு**: உடல் நலனில் கவனம் தேவை, எதிர்பாராத காரிய மொன்று நடை பெறும் வாய்ப்புண்டு, பயணங்களால் வழக்கமான பணி களில் கணக்கம் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்**: மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் உயரும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் ,நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அன்பைத் தேவையுள்ளவர்களுக்கு மட்டும் கொடு.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து நேற்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும் அவற்றினை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும் நேற்று யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**



ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் முன்பாக ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தன.

ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசம் முன்பாக போராட்டத்தை ஆரம்பித்த மீனவர்கள் அங்கிருந்து ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் வரையில் பேரணியாக சென்றனர். பிரதேச செயலகத்திற்கு பேரணியாக சென்ற மீன வர்கள் பிரதேச செயலகம் ஊடாக ஜனாதிபதி மற்றும்கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு மகஜர்கையளித்தனர். (4-5-33-18-104)



யாழ்.நாவாந்துறை கலைவாணி முன்பள்ளியில் நேற்று 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.



தேசிய வாசிப்பு மாதத்தில் (2020) சிறப்பாகச் செயலாற்றியமைக்காக சுன்னாகம் பொது நூலகம் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்றுச் சாதனை படைத்திருந்த நிலையில் பொது நூலகப் பிரதம நூலகர் மற்றும் உத்தியோகத்தர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா நேற்று இடம்பெற்றது. (படம்:-ரவிசாந்)

## சாவகச்சேரி பிரதேச சபையில் மகளிர் - சிறுவர் குழு உருவாக்க அனுமதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையில் இதுவரை இருந்த உப குழுக்களுக்கு மேலதிகமாக 2022 ஆம் ஆண்டு மகளிர்-சிறுவர் குழு ஒன்றினை புதிதாக உருவாக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே குறித்த உப குழு தெரிவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் உறுப்பினர்கள் கடந்த காலங்களில் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இம்முறை குறித்த உப குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் மல்லிகா தலைமையில் சபையின் பெண் உறுப்பினர்கள் சகலரையும் அங்கத்தவர்களாக உள்ளடக்கி மகளிர் - சிறுவர் உப குழு தெரியப்பட்டுள்ளது. (4-5-30)

## இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை கும்பாபிஷேக கிரியைகள், கணபதி ஹோமம் என்பன ஆரம்பமாகியது.

எதிர்வரும் 3 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல், மறுநாள் 4 ஆம் திகதி இரவு 10 மணி வரையில் எண்ணெய்க் காப்பு இடம்பெறவுள்ளது:

எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 8 மணி முதல் முற்பகல் 10.26 மணி வரையிலான சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (4-5-33)

## கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்):

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "யாவர்க்கும் நலம்" எனும் நிகழ்ச்சித் தொடரானது பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி-9 மணிவரை இடம்பெறுகின்றது.

இக் கருத்தமர்வுகளில் பிரபல மருத்துல நிபுணர்கள் கலந்து சிறப்பிக்கின்றனர்.

அந்த வகையில் இன்று 29 ஆம் திகதி சனிக்கிழமை "உடல் உள ஆளுமை வளர்ச்சிக்கான யோகா மற்றும் கராத்தே வழிகாட்டல்" எனும் தலைப்பில் கலந்துரையாடப் படவுள்ளது என வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கான Meeting ID:899 8528 2023, Pass code:354485 ஆகும்.(4-5)

## சித்த மருத்துவ ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

"புதிய இயல்பு நிலையில் எதிர்காலத்தைச் செழுமைப் படுத்தல்" என்ற தொனிப் பொருளின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாடுகளின் வரிசையில் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகினால் நடத்தப்படும் மூன்றாவது சர்வதேச சித்த மருத்துவ ஆய்வு மாநாடு நேற்று முன்தினம் வியாழக் கிழமை கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவ அலகில் ஆரம்பமாகியது.




மாநாட்டுக்கு முன்னரான பயிற்சிப்பட்டறை சித்த மருத்துவ அலகின் தலைவர், சித்த மருத்துவர் திருமதி. தயாளினி திலீபன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ்.ராஜ்குமார், கைதடி சித்த போதனா மருத்துவமனைப் பொறுப்பதிகாரி சித்த மருத்துவர் ஐ.ஜெபநாமகணேசன், பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள், சித்த மருத் துவ அலகின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் "சித்த மருத்துவத்தின் ஊடாக ஆரோக்கியமான வாழ்வுக்கான நோயெதிர்ப்பு சக்தியை மேம்படுத்தல்" என்ற தலைப்பிலான சர்வதேச சித்த மருத்துவ ஆய்வு மாநாடு இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளது. (4-5-33)

## மார்ச் 11, 12 இல் கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொண்ட 500 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதென கச்சதீவு தூய அந்தோனியார் ஆலய அருட்தந்தை வசந்தன் தெரிவித்தார்.

கச்சதீவு திருவிழா தொடர்பில் யாழ்.மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம் பெற்ற கூட்டத்திலேயே மேற் கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா பேரிடர் நிலைமை காரணமாக இந்திய பக்தர்களுக்கு இம்முறையும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இலங்கையை சேர்ந்த 500 பேர் மட்டுமே கச்சதீவு திரு விழாவில் பங்கேற்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் திருவிழாவில் பங்கேற்கும் அனைவரும் பூஸ்டர் டோஸையும் பெற்றிருக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (4 -5-18-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்ச்சல் அறிகுறிகள் காணப்பட்டால்
# மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம்
## விசேட மருத்துவ நிபுணர் கோரிக்கை

(கொழும்பு)

**காய்ச்சல், சளி, வயிற்றுப்போக்கு அல்லது வாந்தி போன்ற அறிகுறிகள் காணப்படும் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துமனையின் விசேட மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நாட்டில் தற்போது மாண வர்கள் மத்தியில் கொரோனா, வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்குக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் வீதம் அதி கரித்துள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

இவ்வாறான அறிகுறிகள் உள்ள மாணவர்களை பாடசா லைக்கு அனுப்பினால், அவர்க ளுக்கு ஓய்வெடுக்க நேர மில்லை எனவும், அவர்களின் உடல்நிலை மோசமாகிவிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், வைரஸ் காய்ச் சலுக்கு சிகிச்சை இல்லை எனவும் மாணவர்களை வீட் டில் வைத்து ஓய்வெடுக்க அனுமதிப்பது சிறந்த வழி எனவும் அவர் தெரிவித் தார்.

மாணவர்களுக்கிடையே பரவல் மட்டுப்படுத்தப்பட விட்டால் அது தேவையற்ற வகையில் பாடசாலைகளை மூடுவதற்கு வழிவகுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (நி-5)

## மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துங்கள்-காமினிலொகுகே

(கொழும்பு)

மின்சாரத்தினை சிக்கன மாக பயன்படுத்துமாறு மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச் சர் காமினி லொகுகே கோரி க்கை விடுத்துள்ளார்.

மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணிவரையில் மின் சாரத்தை சிக்கனமாக பயன் படுத்துமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: சூரி 12 செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L கமம், வியாபாரம்.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12217

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: சூரி 3 செவ் 1 இல்
தகைமை/தொழில்: மாலுமி
எதிர்பார்ப்பு: உள்நாடு
தொ.இ: B/12218

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: சூரி 10 செவ் 6 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:B.F.A பட்டதாரி (ஆசிரியர்)
எதிர்பார்ப்பு: படித்த குணமாண பெண்
தொ.இ: B/12219

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரோகினி 2
கி.பா: 5 சூரி 10 செவ் 11 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSc (Hones Quantity Surveying (T.O)
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/12221

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 55 சூரி 11 செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: சட்டத்துறை இறுதி வருட மாணவி
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தி யோகம்
தொ.இ: G/12303

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: சூரி, செவ் 5
உயரம்: 162 cm
தகைமை/தொழில்: களனி பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ:G:12308

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மகம் 4
கி.பா: சூரி 10 செவ் 7 உயரம்: 5'2"
தகைமை: தொழில்: BSc Quantity Engineer
எதிர்பார்ப்பு: உள்நாடு ஆயின் பட்டதாரி வெளிநாடு ஆயின் லண்டன் அவுஸ்திரேலியா, கனடா
தொ.இ:G/12310

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 42 ½ சூரி 1 செவ் 12 உயரம்: 155 cm
தகைமை: தொழில்: BA பட்டதாரி
எதிர்பார்ப்பு: தகுந்த தனியார், அரச உத்தியோகம்
தொ.இ:G/12311

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## கொக்கட்டிச்சோலை படுகொலையின் 34 ஆம் ஆண்டு நினைவேந்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட் டம் கொக்கட்டிச்சோலை யில் 1987 ஆம் ஆண்டு இறால் பண்ணையில் பணி புரிந்தவர்கள் அகதி யாக இடம்பெயர்ந்து அடைக்கலம் புகுந்திருந்த அப்பாவி பொதுமக்கள் உட்பட 150 இற்கும் மேற் பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

பொலிஸார் மற்றும் புல னாய்வாளர்களின் கெடு



பிடிகள் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நேற்று மரணித்த மக்களை நினைவுகூர்ந்து தூபியில் சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத் தப்பட்டதுடன் மௌன அஞ்சலியும் செலுத்தப் பட்டது. (நி-5)

## துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் மெவ்லூட் கௌசோ, க்லு ஒரு நாள் உத்தி யோகபூர்வ பயணத்தை மேற் கொண்டு இல ங்கை வந்துள் ளதாக விமான நிலைய அதி காரிகள் தெரிவித் தனர்.

அவருடன் 13 பேர் கொண்ட குழுவும் நாட்டை வந்தடைந் துள்ளது. (நி-5)



## காலியிலும் துறைமுக நகரம்

(கொழும்பு)

காலி துறைமுகத்தை சுற்றி கொழும்பு துறைமுக நகரத்திற்கு நிகரான சுற்றுலா வலயம் ஒன்று அமைக்கப்படும் என துறைமுகங் கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ரோஹித அபேகுண வர்தன தெரிவித்தார்.

சுற்றுலா வலயத்தை 40 ஹெக் டேயரில் மணல் நிரப்பி அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதா கவும் அமைச்சர் தெரிவித்தார்.

காலி துறைமுகம் சுற்றுலா வல யமாக அபிவிருத்தி செய்யப்படும் என்ற அரசாங்கத்தின் தேசிய கொள்கையின் ஒரு அங்கமாகவே இந்த அபிவிருத்தி இடம்பெறவுள் ளது.

கொழும்பு துறைமுக நகரத் தைப் போன்று காலியிலும் தனி யார் முதலீட்டாளர்கள் ஊடாக சுற்றுலாத் துறையுடன் தொடர்பு டைய வணிக வளாகங்கள், ஹோட்டல்கள் மற்றும் விடுதிகள் என்பன நிறுவப்படும். இத் திட்டத் தின் மூலம் காலியை சுற்றுலா தல மாக மேம்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ ஊசிகள் செலுத்தப்பட்டு

## அமெரிக்காவில் மரண தண்டனை நிறைவேற்றம்

(வோஷிங்டன்)

**இரண்டு பேரை கொலை செய்து ஹோட்டலில் கொள்ளை அடித்தவருக்கு அமெரிக்காவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.**

அமெரிக்காவின் ஒக்லஹோமா மாகாணத்தில் வசித்து வந்த டொனால்டு கிராண்ட் என்பவர் கடந்த 2001 ஆம் ஆண்டு தனது 25 வயதில், ஹோட்டல் ஒன்றில் புகுந்து இரண்டு ஊழியர்களை கொலை செய்து கொள்ளையடித்தார்.

டொனால்டு கிராண்ட் ஒரு ஊழியரை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததுடன், மற்றொருவரை கத்தியால் குத்தி கொலை செய்தார். சிறையில் இருந்து அவரது காதலியை ஜாமீனில் எடுக்க பணம் தேவைப்பட்டதால் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டதாக விசாரணையில் தெரிவித்தார்.

விசாரணை முடிவில் அவருக்கு நீதிமன்றம் கடந்த 2005 ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்து உத்தரவிட்டது. இதை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்தார். மேல்முறையீட்டில் அவருக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கவில்லை. இதனால் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது.

அமெரிக்காவில் மரண தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுத்ததால் டொனால்டு கிராண்டின் தண்டனை நிறைவேற்றம் தள்ளிப்போனது.

இதில் ஒக்லஹோமா மாகாணமும் ஒன்று. கடந்த 2015 ஆம் ஆண்டு மரண தண்டனை நிறைவேற்ற தடைவிதிக்கப்பட்டது. அந்த தடை கடந்த ஆண்டு நீக்கப்பட்டது. இந்த நிலையில் டொனால்டு கிராண்டிற்கு மூன்று விஷ ஊசிகள் செலுத்தப்பட்டு மரண் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த ஆண்டின் முதலாவது மரண தண்டனை இது வாகும். (நி-5)

# ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்த வேண்டும்

## சீனா எச்சரிக்கை

(பீஜிங்)

பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்த வேண்டும் என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அண்டனி பிளிங்கனிடம் பேசிய சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தாய்வான் விவகாரத்தில் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இது குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் போதும் எதிரொலிக்கும் என சீனா கருதுகிறது.

ஏற்கனவே சீனாவின் மனித உரிமை மீறல்களால் குளிர்கால ஒலிம்பிக்கிற்கு அதிகாரபூர்வ குழுவை அனுப்பப் போவதில்லை என அமெரிக்கா கடந்த மாதம் அறிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே அமெரிக்காவுக்கு சீனா கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

சீனாவின் பீஜிங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி நிறைவடையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஈராக் விமான நிலையத்தில் ரொக்கெட் தாக்குதல்




(பக்தாத்)

ரொக்கெட் தாக்குதல்களால் பக்தாத் சர்வதேச விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானமொன்று சேதமடைந்துள்ளதாக ஈராக் பொலிஸ் வட்டாரங்கள்உறுதிப்படுத்தியுள்ளன.

நேற்று அதிகாலை இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் காரணமாக எந்த உயிர் சேதமோ அல்லது காயங்கள் எதுவுமோ பதிவாகவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சேதமடைந்த விமானம் பயன்பாட்டில் இல்லாத ஈராக் ஏயர்வேஸ் நிறுவனத்துக்கு சொந்தமானதாகும். (நி-5)

# கொரோனா கட்டுப்பாடுகளை மெல்லத் தளர்த்தும் வடகொரியா


## சீனாவுடனான ரயில் போக்குவரத்திற்கு அனுமதி

(பியாங்யாங்)

கொரோனா கட்டுப்பாடுகளை சுமார் 2 ஆண்டுகளுக்குப் பின்னர், வடகொரியா மெல்ல தளர்த்த ஆரம்பித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக சீனாவை அண்மித்துள்ள அதன் எல்லைகள் திறக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, வடகொரியா - சீனா இடையிலான சரக்கு ரயில் போக்குவரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



கொரோனாத் தொற்று பாதிக்காத நாடு என கூறி வரும் ஜனாதிபதி கிம் ஜாங் உன் தலைமையிலான வடகொரிய அரசாங்கம், தடுப்பூசி தொடர்பாக இது வரை எந்த நாட்டின் உதவியையும் கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வோஷிங்டனில் துப்பாக்கி பிரயோகம்

## ஒருவர் உயிரிழப்பு, நால்வர் படுகாயம்




(வோஷிங்டன்)

வடமேற்கு வோஷிங்டனின் வான் நெஸ் பகுதியிலுள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், துப்பாக்கிச் சூடு தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி-5)

# ஆபிரிக்க நாடுகளை தாக்கிய அனா புயல் 70 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

தெற்கு ஆபிரிக்க நாடுகளை.அனா எனும் வெப்பமண்டலப் புயல் தாக்கியதால் உண்டான மழை வெள்ளத்தால் 70 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

மடகஸ்கார், மலாவி, மொசாப்பிக் ஆகிய இடங்களை அனா தாக்கியுள்ளது.

பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்ததுடன் இருபதாயிரம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். (நி-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நீதிக்கான அணுகல்'
# நடமாடும் சேவைக்கு எதிர்ப்பு
## முல்லைத்தீவிலும் உறவுகள் போராட்டம்

(பனிக்கன்குளம்)

**நீதி அமைச்சர் அலிசப்ரி தலைமையிலான நீதி அமைச்சின் 'நீதிக்கான அணுகல்' நடமாடும் சேவைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொட்டும் மழையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்று போராட்டம் மேற்கொண்டனர்.**



காணாமல் போனோருக்கான அலுவலகம் கண்துடைப்பு நாடகம் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தை நிராகரிக்கிறோம் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டம் மேற்கொண்டோரை சந்தித்த நீதி அமைச்சின் அலுவலக அதிகாரி ஒருவர் மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் நடமாடும் சேவை முகாமுக்கு வருகை தருமாறும் அமைச்சரோடு கலந்துரையாடுமாறும் அழைப்பு விடுத்தார்.

இதனை நிராகரித்த போராட்டகாரர்கள் எதிர்வரும் ஜெனிவா அமர்வை சமாளிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த கண்துடைப்பு நடவடிக்கையில் எமக்கு நம்பிக்கை இல்லை. எமக்கு நட்ட ஈடோ மரண சான்றிதழோ தீர்வாகாது. குறைந்தபட்சம் இராணுவத்திடம் கையளித்தோருக்காவது என்ன நடந்தது என்ற பதிலையாவது இந்த அரசாங்கம் சொல்லவேண்டும். அதனைக்கூட இந்த அரசாங்கம் செய்யாது.

இந்த அரசின் மீதோ நீதித்துறை மீதோ எமக்கு நம்பிக்கை இல்லை என தெரிவித்தனர். (4-5-281)



## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம் பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ந.மகேஸ்வரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பு நிகழ்வாக இடம் பெறும். (4-5)

# ஓ.எம்.பி அலுவலக அமர்வை புறக்கணித்த உறவுகள்

(பனிக்கன்குளம்)

நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான நீதி அமைச்சின் நீதிக்கான அணுகல் நடமாடும் சேவை நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற OMP அலுவலகத்தின் அமர்வில் வெறும் நான்கு பேர் மாத்திரம் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்ததோடு அதில் கலந்துகொண்டவர்களில் மூன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இழப்பீடோ நட்ட ஈடோ தமக்கு வேண்டாம் எனவும் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற நீதி விசாரணையே வேண்டும், தமது உறவுகளே வேண்டும் என நீதி அமைச்சரிடம் தெரிவித்தனர்.(4-5-281)



மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட முசலி தேசிய பாடசாலையில் ஐ.எஸ்.ஆர்.சி. அமைப்பின் நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ள இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

(படம் : ஜோசப் நயன்)



பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவு திட்ட நிதி (2021) மூலமாக கடந்த வாரம் பூநகரி ஜெயபுரம் சிறீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்திற்கு ஒளியூட்டுவதற்காக உயர் அழுத்த மின் குமிழ்கள் கழக நிர்வாகத்திடம் பூநகரி பிரதேச [illegible] சி.சிறிரஞ்சனால் வழங்கப்பட்டன. ([illegible])

# சனிப்பிரதோஷ விரதம் இன்று



உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுடைய அருட்பெருங் கருணையினால் தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆடல் வல்லான் என அழைக்கப்படுகின்ற அவன் ஆடுகின்றான். நாங்களும் ஆடுகின்றோம். அவன் ஆடாவிட்டால் நாங்களும் அடங்கி விடுவோம். அவனன்றி ஓரணுவும் அசையாது. அப்பேர்ப்பட்ட பரங்கருணைத் தடங்கடலாகிய பரமேஸ்வரனாகிய சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கப் பெறும் புனித புண்ணிய விரதம் தான் சனிப்பிரதோஷ விரதம்.

இன்று கூடுகின்ற இந்த சனிப்பிரதோஷம் மிகவும் மகிமையும் மாண்பும் மிக்க மிக விசேஷமான விரதமாகும். இந்த விரதத்தை சைவ சமயிகள் அனைவரும் அனுட்டித்து நல் வாழ்வு வாழலாம் என்பது ஆன்றோர் நம்பிக்கை.

பல பேருக்கு இந்த விரதத்தின் மகிமை பற்றித் தெரியாது. இந்த விரதத்தை முறையாக அனுட்டித்தால் எங்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கும். பயம், வறுமை, கடன் தொல்லை, நோய், கிலேசம், பாவம் என்று அனைத்தும் அறவே அற்றுப் போகும். பிரதோசம் என்பது சிவனுடைய கருணைத் திறன் வெளிப்படும் காலமாகும். இதனுடைய அருமையும் பெருமையும் சொல்லில் அடங்காது.

சுக்கில பட்சம் கிருஷ்ண பட்சம் என்னும் இரண்டு பட்சத்திலும் வருகின்ற திரயோதசி என்று சொல்லப்படுகின்ற பதின் மூன்றாவது திதியிலே சூரிய அஸ்தமனத்துக்கு முன்னர் மூன்றே முக்கால் நாழிகையும் பின்னர் மூன்றே முக்கால் நாழிகையுமாக வருகின்ற புண்ணிய நேரமே பிரதோஷ காலமாகும்.

இந்த விரதத்தின் வழிபாட்டு முறை மிக விசேஷமானது. முதலில் வினை தீர்க்கும் விநாயகரைக் குட்டிக் கும்பிட்டுக் கொண்டு இடபதேவரை வணங்கி அங்கிருந்து இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்து சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்துக் கொண்டு அங்கிருந்து வலமாகச் சென்று வடக்குத் திசையை அடைந்து கோமுகையைக் கடக்காமல் முன் சென்ற வழியே திரும்பி வந்து நந்திதேவரைத் தரிசித்து அங்கிருந்து இடப்பக்கமாய்ச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்து பின்பு திரும்பி இடபதேவரைத் தரிசிக்காமல் வலமாகச் சென்று, வட திசையைச் சேர்ந்து அங்கிருந்து திரும்பி வந்து நந்திதேவரைத் தரிசிக்காமல் இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்துத் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து அதன் பின்பு சிவலிங்கமாக எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வணங்கித் தியானிக்க வேண்டும். இதுவே பிரதோஷ வணக்கமாகும்.

இந்த விரதத்தை உண்மையான பக்தியுடன் அனுட்டிக்க வேண்டும். காலையில் எழுந்து புனித புண்ணிய - நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து சந்தியாவந்தனம் முடித்து சிவாலய தரிசனஞ் செய்தல் வேண்டும். பின்பு மாலை 5 மணிக்கு ஆலயஞ் சென்று அங்கு நடைபெறும் விசேட அபிஷேக ஆராதனைகளில் கலந்து கொண்டு சிவ வழிபாடு செய்ய வேண்டும்.

உண்பதற்கு முன்பு எல்லாக் கறிகளையும் சேர்த்து ஒன்றாய் பிசைந்து காகத்துக்கு வைக்க வேண்டும்.

மேலும் இன்றைய சனிப்பிரதோச விரதத்தை முறையாக அனுட்டித்து பூவுலக வாழ்வில் சதுர்வித புருஷார்த்தங்களை அடைந்து நல்வாழ்வுக்கு வழி சமைப்போமாக.

"சிவநெறிக் கலாநிதி"
இராசையா ஸ்ரீதரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா தொற்று ஏற்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படும் அபாயம்!

(கொழும்பு)

**கொரோனாத் தொற்று ஏற்பட்டு மூன்று முதல் ஆறு மாதங்களுக்குள் நீரிழிவு நோய் ஏற்படும் அபாயம் இருப்பதாக நீரிழிவு சம்மேளனத்தின் தலைவரும், கொழும்பு தேசிய மருத்துவமனையின் உட்சுரப்பியல் நிபுணருமான மருத்துவர் மணில்க சுமணதிலக்க தெரிவித்துள்ளார்.**

இதன் காரணமாக கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் சுமார் ஆறு மாதங்களுக்குப் பின்னர் தங்களது இரத்தத்திலுள்ள சீனியின் அளவினை பரிசோதித்துக் கொள்வது நல்லது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)




# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

## சூரிய நாராயண பூஜை



வழிபடும் முறை

பொங்கல் பண்டிகையின் போது பெண்கள் சூரியன் உதிப்பதற்கு 5 நாழிகைக்கு முன்பு எழுந்து நீராடி விட்டு, வீட்டு முற்றத்தில் நீர் தெளித்து கோலமிட வேண்டும். வீட்டின் முற்றத்தில் ஒரு பகுதியை பசுவின் சாணத்தால் மொழுகி, வெள்ளையடித்து, காவி பூச வேண்டும்.

அரக்கு நிறம் துர்க்காதேவிக்குரியது. துன்பங்கள் விலகி மங்கல வாழ்வும், இன்பமும் நிலைக்க காவி பூசப்படுகிறது. அந்தப் பகுதியை மாவிலை, வாழை, கரும்பு மற்றும் மலர்களால் அலங்கரித்து, பிள்ளையாரை பிடித்து வைக்க வேண்டும். பின்னர் குத்து விளக்கேற்றி, பூரண கும்பம் வைத்து வெற்றிலை, பாக்கு, தேங்காய் முதலிய மங்கலப் பொருட்களையும் படைக்க வேண்டும்.

விநாயகரை முதலில் மனதில் நினைத்து, இஷ்டதெய்வங்களை பிரார்த்தனை செய்ய வேண்டும். ஒரு புதுப்பானையை எடுத்து அதன் வாய்ப்புறத்தில் மஞ்சள் இலை, மாவிலை கட்ட வேண்டும். பானையின் மேற்புறத்தில் திருநீறை குழைத்து, 3 இடங்களில் பூசி, சந்தனம், குங்குமத்தால் திலகமிட வேண்டும்.

பானைக்குள் பசும் பாலும், நீரும் விட்டு நிரப்பி தூபதீபம் காட்டி, கற்பூரத் தீபத்தினால் அடுப்பில் நெருப்பை உண்டாக்கி பற்ற வைக்க வேண்டும்.

பின்னர் கணவரும், மனைவியும் சூரியனை வணங்கி, இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தனை செய்து பானையை பக்குவமாக தம் கைகளால் பற்றி பிடித்து தூக்கி அடுப்பில் வைக்க வேண்டும். பானையில் பால் பொங்கி வரும் போது பொங்கலோ, பொங்கல் என்று உரத்தக் குரல் எழுப்ப வேண்டும்.

தொடர்ந்து குடும்பத்தலைவர் புதிய நெல்லினை குத்தி எடுத்து வைக்கப்பட்ட பச்சரிசியை இருகைகளாலும் அள்ளி சூரிய பகவானை வணங்கியபடி பானையின் வாய் விளம்பினை 3 முறை சுற்றி பானையில் இட வேண்டும்.

தொடர்ந்து குடும்பத்தில் உள்ளவர்கள் அரிசி, வெல்லம், கற்கண்டு, திராட்சை, முதலியவற்றை இட வேண்டும். பின்னர் பொங்கிய பொங்கலை 3 தலைவாழை இலையில் இட்டு படைத்து பழங்கள், கரும்பு, முதலியவற்றைக் கொண்டு அர்ச்சித்து, தூப தீபம் காட்டி சூரிய பகவானை வணங்கி வழிபாடு செய்ய வேண்டும். தீபாராதனை காட்டும் போது குல தெய்வத்தையும், மூதாதையர்களையும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## ரயிலுடன் மோதுண்டு ஒருவர் பலி

(கொழும்பு)

கொஸ்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்துருவ புகையிரத நிலையத்திற்கு அருகில் ரயிலுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. மருதானையிலிருந்து பொலியத்த நோக்கி பயணித்த ரயிலிலேயே குறித்த நபர் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மஹா இந்துருவ பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் பலபிட்டிய மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கொட பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

## வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

(கொழும்பு)



சதொச ஊழியர்களை அரசியலில் ஈடுபடுத்தியதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு எதிராக சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு பிரதான நீதவான் புத்திக சி.ராகல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 360 | 450 |
| உருளைக்கிழங்கு | 170 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 |
| தக்காளி | 180 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 50 |
| கோவா | 180 | 230 | 240 |
| கரட் | 400 | 460 | 500 |
| பூசணி | 140 | 130 | 180 |
| புடோல் | 250 | 200 | 240 |
| வாழைக்காய் | 80 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 120-250 | 500 |
| பெரிய வெங்காயம் | 170 | 200 | 240 |
| பாகற்காய் | 350 | 300 | 500 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 90 | 120 | 140 |
| பயற்றங்காய் | 450 | 450 | 400 |
| லீக்ஸ் | 240 | 260 | 300 |
| பீற்றூட் | 300 | 360 | 320 |
| கறிமிளகாய் | 600 | 580 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | -- |
| போஞ்சி | 400 | 450 | 450 |
| கத்தரிதம்புள்ள | 300 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 70 | 100 | 80 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50-80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 180 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 260 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 120 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் எழுச்சி பெறும் காலம்

# வந்துவிட்டது- ஐ.ம.ச

(கொழும்பு)

அரசாங்கம் நாட்டு மக்களின் பிரச்சினையில் தலையிடுவதை தொடர்ந்தும் தாமதம் செய்தால், அந்த பிரச்சினை மேலும் உக்கிரமடைய காரணமாக அமையும் என ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் மக்கள் எழுச்சி பெறும் காலம் வந்துள்ளது.

அந்த மக்கள் எழுச்சியானது அமைதியான முறையிலும் அகிம்சை வழியிலும் இருக்க வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ரி-5)

# தேர்தல்களில் போட்டியிட மாட்டேன்

## அத்துரலிய ரத்ன தேரர்



(கொழும்பு)

இனிவரும் தேர்தல்களில் தான் போட்டியிடப்போவதில்லை என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் எங்கள் மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

இனி தேர்தல் அரசியலில் ஈடுபடும் எண்ணம் தனக்கு இல்லை எனவும் மாறாக பலமான மக்கள் அமைப்புடன் மக்களை வழிப்படுத்துவேன் என்றும் அவர் தெரிவித்தார். (ரி-5)

## ஹற்றன்–டிக்கோயா பகுதியில்

# 30 அடி பள்ளத்தில் பாய்ந்த பேருந்து ஒருவர் பலி, 16 பேர் காயம்



(ஹற்றன்)

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா சலங்கந்தை - ஹற்றன் பிரதான வீதியின் தரவளை பட்டல் கலை பகுதிக்கு அருகில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 16 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றனில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றுக்கு தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு பயணித்த பேருந்து, வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எதிரே வந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றுக்கு இடம் கொடுக்க முயன்ற போதே, குறித்த தனியார் பேருந்து இவ்வாறு பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் சாரதி உட்பட 16 பேர் காயமடைந்த நிலையில், டிக்கோயா கிளங்கன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அதே வேளை ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த பேருந்தின் சாரதி ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவரை ஹற்றன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ரி-5)

# 1800 ரூபாவிற்கு விற்கப்படும் சீமெந்து

## நுகர்வோர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுற்றிவளைப்புகளை மேற்கொண்டாலும், சில வர்த்தகர்கள் அதிக விலைக்கு சீமெந்தை தொடர்ந்தும் விற்பனை செய்வதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பெரும்பாலான பகுதிகளில், சீமெந்து மூடையின் விலை 1,600 முதல் 1,800 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நுகர்வோரிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் காரணமாக நுகர்வோர் அதிகார சபை கடந்த சில நாட்களாக நாட்டின் பல பாகங்களில் அதிக விலைக்கு சீமெந்தை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக குறிப்பிடத்தக்க (ரி-5)

# இன்று ஒரு தகவல்

# சிபாரிசுகள்

ஒருவர் –

சுவட்டிப்போன சினிமா; சாப்பிடச் சொன்ன ஹோட்டல்; வாங்கச் சொன்ன பொருள்; அறிமுகப்படுத்திய நண்பர்; சேர்த்துவிட்ட வேலை ஆகிய வற்றில் குறைகண்டு, அவற்றைப் பற்றிச் சிபாரிசு செய்பவரிடமே மட்டமாக விமர்சிக்கும் பழக்கம் உங்களிடம் இருக்கிறதா?

அதை இன்றோடு கைவிடுங்கள்!

ஏன் என்கிறீர்களா?

சிபாரிசு செய்தவர்கள் தங்களையும் அறியாமல், உள் நோக்கம் எதுவுமின்றி, நீங்கள் நன்மையடைய வேண்டும் என்ற நினைப்போடு உங்களுக்கு உதவுகிறார்கள். அதன் மூலமாக உங்களது மகிழ்ச்சியும் நன்றியுணர்வும் தங்களிடத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் எதிர் பார்க்கிறார்கள்.

மேலும், தங்களையும் அறியாமல் தாங்கள் சிபாரிசு செய்த விடயத்தின் மீது ஒருவிதப் பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டும் விடுகிறார்கள்.

இந்தப் பிணைப்பு காரணமாக, சிபாரிசுக்கு உரியவற்றைக் குறை சொன்னால் தங்களையே குறை சொன்னதாக எண்ணிக் கொண்டு வேதனைப்படுகிறார்கள்.

உண்மையிலேயே தாங்கள் சிபாரிசு செய்த அம்சங்களில்

குறையிருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல், உங்கள் மீது கோபம் கொள்கிறார்கள். அல்லது, உங்கள் செயலை எண்ணி வேதனைப்படுகிறார்கள்.

நமக்கு எதிலுமே கொஞ்சமாவது சுயமான சிந்தனை வேண்டும். எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்து கொண்டு மற்றவர்கள் காட்டும் பாதையில் குறைகூறுவதில் பயனில்லை. மாறாக, அப்படிச் செய்வதன் மூலம் உறவு கெடுவதுதான் மிஞ்சும்.

மேற்கூறிய சூழ்நிலையை எண்ணி நம்மை நாமே நொந்து கொள்வதுதான் முறை.

அல்லது,

அவர்களது நல்லதொரு வழிகாட்டி மனப்பான்மையை எண்ணியாவது நாம் சும்மா இருக்க வேண்டும். மற்றவர்களின் சிபாரிசால் நாம்பாதிக் கப்பட்டிருந்தாலும், அது தொடர்பான விடயத்தை நாமாக வலியப் பேசாமல் இருப்பது நல்ல முறை.

அவர்கள் வலிய முன்வந்து வாயைக் கிண்டினால்,

இதமாக – நாசூக்காக – தன்மையாக – சற்றும் மிகைப்படுத்தாமல் – முடியுமானால் குறைத்துச் சொல்ல வேண்டும்.

அப்படிச் செய்தோமேயானால் சிபாரிசுக்குரிய பொருட்களின் மீதோ அவற்றோடு சம்பந்தப்பட்ட நபர்களின் மீதோ கோபம் – வருத்தம் பாயுதே தவிர உங்கள் மீது பாயாது. மாறாக, உங்களை இந் நிலைக்கு ஆளாக்கினோமே என்ற அனுதாப உணர்வுதான் அவர்களுக்குத் தோன்றும்.

இந்த மனநிலைக்கு அவர்களை உள்ளாக்கி விடுவதில் உங்களுக்கு வெற்றி கிட்டுமானால்–

அதன் மூலம் பின்னால் ஏற்படப்போகும் பயன் களைச் சொல்லி முடியாது!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

ஐந்து, பத்து நிமிடங்களுக்குள் அவன் தலை, தோல் ஆகியவை கருகி இரண்டு கைகளும் பிடிப்பற்றுக் கீழே விழுந்தன.

அந்த வீரன் மெழுகினால் செய்யப்பட்ட உருவப்பொம்மையென்று இப்போது அனைவருக்கும் புரிந்தது.

இப்போது இளைஞன் தீப்பந்தத்தை அணைத்து விட்டு, "அரசே, நான் உருக்கிய வீரன் மெழுகுப் பொம்மையினால் செய்யப்பட்டவன்.

அருகில் எனக்கு இடது கைப்பக்கமாக நிற்கும் வீரன் உண்மையான மனிதன்!" என்று கூறினான்.

"சபாஷ்!" என்று பாராட்டினான் அரசன்.


## அறிவாளி



"உன்னுடைய உற்றுநோக்கும் திறன், சிந்திக்கும் தன்மை, நீ செயற்பட்ட விதம் ஆகியவை உன்னை அறிவாளி என்று ஏற்க வைத்துவிட்டது.

நீயே இந்நாட்டு மந்திரிகளில் ஒருவன். இறந்த அமைச்சரின் பதவியை நிரப்ப வந்த தேர்ந்த அறிவாளி. வாழ்க நீ!" என்றான் மன்னன். (முற்றும்)

# மகாபாரதம்




அது கேட்ட நாரதர், "தருமா! பகையை மண்ணுலகோடு மறந்து விட வேண்டும். சுவர்க்கத்திற்கு வந்த பின் மண்ணுலக வாழ்வை ஏன் நினைக்கிறாய்?

துரியோதனன் க்ஷத்திரியர் தம் இயல்புக்கு ஏற்ப வீரப்போர் புரிந்து இங்கு வந்து சேர்ந்துள்ளான்.

இவனது மேன்மையை இங்குள்ளோர் பாராட்டுகிறார்கள் பார்" என்றார். நாரதரின் இந்த விளக்கத்தை ஏற்க தருமர் மறுத்து விட்டார். "என் சகோதரர்கள் சுவர்க்கத்தில் எந்த இடத்தில் இருக்கிறார்கள்? கொடை வள்ளல் கர்ணன் எங்கே? அவனையும் காணவிரும்புகிறேன்.

விராடனையும், துருபதனையும், வீரப்போர் புரிந்து சுவர்க்கத்திற்கு வந்து இருக்கிறார்களே அவர்களையும் காண விரும்புகிறேன். வீர அபிமன்யுவைக் காண வேண்டும்" என்றார்.

முதலில் தனது சகோதரர்களைக் காண விழைந்த தருமருக்குத் தேவதூதன் ஒருவன் வழிகாட்டிச் சென்றான். செல்லும் வழியெங்கும் துர்நாற்றம் வீசியது. எங்கும் தசையும், ரத்தமும் கலந்த சேறாகக் காணப்பட்டது. அழுகிய பிணங்கள் மீது நடந்து செல்ல வேண்டியிருந்தது. பிணங்களை உண்பதற்காகக் கழுகுகளும் காகங்களும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

அந்தக் கோரமான காட்சியைக் கண்டு தருமர் திடுக்கிட்டார். தகதக என காய்ச்சப்பட்ட எண்ணெய்க் குடங்களைப் பாவிகளின் தலையில் போட்டு உடைக்கக் கண்டு உள்ளம் பதறினார்.

இந்தக் கொடூர வழியில் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும். என் சகோதரர்கள் எங்குள்ளனர்? என தூதனை வினவினார்.

இந்தத் துயரக் காட்சியின் கொடுமையை நான் மேலும் காண விரும்பவில்லை. திரும்பிச் சென்று விடலாம்" என்றார்.

அந்த நேரத்தில், "தருமரே! இன்னும் கொஞ்ச நேரமாவது நீங்கள் இங்கு இருங்கள். உங்களால் எங்கள் துன்ப வேதனை குறைந்திருக்கிறது. திரும்பிப் போகாதீர்கள்" என பல குரல்கள் கெஞ்சிக் கேட்டன.

வியப்புற்ற தருமர் அக்குரல்கள் பீஷ்மர், துரோணர், கர்ணன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன், திரௌபதி ஆகியோருடைய குரல்கள் அவை என அறிந்தார். உடன் மூர்ச்சித்தார். சிறிது நேரம் கழித்து எழுந்து, சினம் கொண்டு தேவதூதனிடம் "நீ போய் இந்திரனிடம் கூறிவிடு. வாழும் நாளெல்லாம் தீமையே செய்து கொண்டிருந்த துரியோதனன் தேவ சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

ஒரு குற்றமும் செய்யாத என் சகோதரர்களும், திரௌபதியும் நரகத்தில் வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர், நல்லது செய்பவர்கள் நரகத்திற்கு செல்ல வேண்டும் என்பதுதான் நீதி எனில் அந்த நரக வேதனையை அனுபவிக்க நான் தயார்" என்றார்.

தேவதூதன் தருமர் சொன்னதை இந்திரனிடம் கூற, இந்திரன் மற்றும் அனைத்துத் தேவர்களும் தருமர் முன் தோன்றினர். அந்த நேரத்தில் நரகக் காட்சி மறைந்தது. தருமர் கண்ட நரகக் காட்சி வெறும் மாயை என்பதை தருமரின் தெய்வீகத் தந்தையான எமதர்மர் விளக்கினார். நரகத்தில் சிறிது நேரம் தருமர் தங்க வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது?

அவர் தரும நெறியிலிருந்து வழுவாத வாழ்க்கையை மேற்கொண்டிருந்தாலும், ஒரு உண்மையில் பாதியை மறைத்துக் கூறியது அவரது நெறிக்கு மாறுபட்டது. "அசுவத்தாமன் இறந்தான்" எனத் துரோணர் நம்புமாறு செய்தது தருமர் மனசாட்சிக்கு மாறாக நடந்து கொண்ட செயலாகும். தம் நெஞ்சு அறிந்த பொய் காரணமாக நரகத் துன்பத்தை சிறிது நேரம் அவர் உணருமாறு ஆயிற்று.

தாமே தருமரை சோதித்ததை எமதர்மர் நினைவுபடுத்தினார். முன்பு துவைத வனத்தில் அரணிக்கட்டையைத் தேடிய போது முதல் முறையாகவும் நாய் வடிவத்துடன் வந்து இரண்டாம் முறையாகவும் சோதித்ததைக் கூறினார்.

தற்போது இந்திரனால் தோற்றுவிக்கப்பட்ட நரகக் காட்சியிலும் தருமர் வெற்றி பெற்றார். உண்மையில் தம் சகோதரர்களும், திரௌபதியும் சுவர்க்கத்தில்தான் இருக்கின்றனர் என்பதனை உணர்ந்த தருமர் வான கங்கையில் நீராடினார்.

மண்ணக மாந்தர்க்கு அணியாக விளங்கிய தருமர் விண்ணகம் அடைந்தார். தேவர்கள் சூழ்ந்து நின்று அவருக்கு வரவேற்பு அளித்தனர். அவரது மனதில் இருந்த பகை உணர்ச்சி அடியோடு விலகியது. திருதராட்டிர குமாரர்களும் பாண்டவர்களும் இருக்கும் சுவர்க்கத்தை சென்றடைந்தார்.

சுவர்க்கத்தை அடைந்து சில காலம் தங்கி இன்பம் அனுபவித்த பின் சிலர் பரம்பொருளுடன் ஐக்கியமாயினர். சிலர் தாங்கள் செய்து புண்ணிய காரியங்களுக்கு ஏற்பப் பல்வேறு தேவர்களாயினர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவத்தின் தீமை என்னவென்றால் இன்பங்களை சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்ளாதது. சோஷலிசத்தின் நன்மை என்னவென்றால் கஷ்டங்களை சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்ளாதது. - வின்ஸ்டன் சர்ச்சில்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற மற்றுமொரு நாடகம் தயார்!

உலகில் பகைமை கொண்ட நாடுகளைத் தவிர ஏனைய உலக நாடுகள் எப்போதும் ஆட்சியாளர்களுக்கே ஆதரவாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த அடிப்படையில் உலக நாடுகள் இலங்கை ஆட்சியாளர்களுக்கு எப்போதும் ஆதரவாக இருந்து வருகின்றன என்பது தெரிந்ததே.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதைக் கூறுகின்ற அளவில் எங்கள் மீதான உலக நாடுகளின் கவனமும் கருசனையும் மட்டுப் படுத்தப்படும்.

இதற்குக் காரணம் இலங்கையில் நாம் சிறுபான்மை இனம். தவிர, தமிழ் இனத்துக்கென தனியான நாடோ ஆட்சி உரிமையோ கிடையாது.

இந்நிலையில் இலங்கை அரசுக்கு எதிராக - தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதன் மூலம் தமக்கு எந்த நன்மையும் ஏற்படமாட்டாதென்ற அடிப்படையில், எங்கள் மீது வெளிநாடுகள் கருசனை கொள்ளப் போவதில்லை என்பதும் நிறுதிட்டமான உண்மை.

இந்த நிலையில்தான் அண்டைநாடான இந்தியா எங்கள் நலனில் கருசனை கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றோம்.

இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் பிரதான காரணம் எங்கள் தமிழ்ச் சகோதரர்கள் வாழுகின்ற தமிழகம் இந்தியாவின் மாநிலமாக இருப்பதாலும் ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய வரலாற்றுத் தொடர்பு உண்டென்ற காரணத்தாலும் இந்தியாவின் வகிபங்கு எமக்குக் கட்டாயம் தேவை என்பதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஆனாலும் இந்தியாவின் வகிபங்கைத் தீர்மானிக்கின்ற அதிகாரம் மத்திய அரசிடம் இருப்பதாலும் மத்திய அரசுக்கும் தமிழகத்து மாநில அரசுக்கும் இடையில் முரண்பாட்டுப் போட்டி இருப்பதன் காரணமாகவும் எங்களுக்கான இந்தியாவின் ஆதரவு திருப்தியாக இல்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இந்த நிலையில்த்தான் ஈழத் தமிழ் மக்களாகிய எங்களை ஏமாற்றுகின்ற நாடகத்தை இலங்கை ஆட்சியாளர்கள் கனகச்சிதமாக அரங்கேற்றி வருகின்றனர்.

ஆம், காலத்துக்குக் காலம் சர்வதேச நாடுகளை, ஐ.நா மனித உரிமை ஆணையத்தை நம்பவைத்து ஏமாற்றுவதனூடு; தமிழ் மக்களுக்கு எந்த உரிமையும் கிடைக்காமல் செய்வதில் இலங்கை ஆட்சியாளர்கள் வெற்றி கண்டு வருகின்றனர்.

இந்த வழமையில், இப்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் திருத்தியமைக்கின்றோம் என்ற பேரில் எங்களை ஏமாற்றுவதற்காக உலக நாடுகளை நம்பவைக்கின்ற நாடகத்தை இலங்கை ஆட்சியாளர்கள் தயாரித்துள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் திருத்துகின்ற நடவடிக்கையும் எங்களுக்கு எந்த விமோசனத்தையும் தரப்போவதில்லை என்பது சர்வநிச்சயம்.

# கம்பன் கழகத்தின் வழக்காடு மன்றம்

அகில இலங்கை கம்பன் கழகமும் அவுஸ்திரேலியக் கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் "முந்துதமிழ்" எனும் மாதாந்த இயலரங்கின் ஜனவரி மாத நிகழ்வு இன்று 29.01.2022 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு (இலங்கை நேரம்) நிகழ்நிலை நிகழ்வாக நடைபெறும்.

"குற்றக் கூண்டில் சம காலப் படைப்பாளிகள்" எனும் பொருளிலான வழக்காடு மன்றம் நிகழவுள்ளது. இதன் தகைசார் நீதியரசராக கம்பவாரிதி இ.ஜெயராஜ் கலந்து கொண்டு சிறப்பிக்கவிருக்கிறார். வாதிகளாக தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் இரா. மாது, எழுத்தாளர் ஞானம் பாலச்சந்திரன் குற்றத்தை சுமத்தவுள்ளனர். பிரதிவாதிகளாக தமிழ் நாட்டைச் சேர்ந்த வழக்கறிஞர் கே.சுமதி, எழுத்தாளர் வசந்தி தயாபரன் விவாதிக்கவுள்ளனர்.

நிகழ்நிலையாக அமையவிருக்கும் இந் நிகழ்வு ஒவ்வொரு மாதமும் நிறைவுச் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும்.

AKILA ILANGAI KAMBAN KAZHAGAM, KAMBAN KAZHAGAM AUSTRALIA எனும் யூடியுப் முகவரிகளிலும் KAMBAVARITHY ILANKAI JEYARAJ, KAMBAN KAZHAGAM AUSTRALIA எனும் பேஸ்புக் முகவரிகளிலும் இணைய வழி நேரலையாக பார்த்து மகிழலாம். (ம)

# சபாநாயகர் மற்றும் இரு சபை உறுப்பினர்களுக்கு தொற்று

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று மேற்கொள்ளப்பட்ட கோவிட் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு நேற்றையதினம் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஹெரோயின் போதையுடன் சுன்னாகத்தில் ஒருவர் கைது

(அராலி)

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் 5 கிராம் ஹெரோயினுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தெல்லிப்பழை பொலிஸாரால் இக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் ஹெரோயினை எடுத்துச் செல்லும்போதே சுன்னாகத்தில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ம-104)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 30 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** கந்தையா உபாத்தியார் சந்தி, கொத்தியாவத்தை, அண்ணாமலையார் ஸ்ரீ ராகவேந்திரா என்ர பிறைசஸ், பிரிட்டிஷ் கவுன்சில், றக்கா வீதி, கார்கில்ஸ் பூட் சிற்றி,- கன்னாதிட்டி, எவர்கிறீன் அச்சகம், ஹரிகணன் பிறைவேற் லிமிட்டெட், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி, இயற்கை விஞ்ஞானபீடம், விஞ்ஞானபீடம், தியாகி அறக்கொடை நிலையம், பல்கலைக்கழக கல் லூரி, பல்கலைக்கழக விடுதி, செலிங்கோ, மெகாமால், றியோ ஐஸ்கிறீம் ஹவுஸ், அரசடி வீதி, சீனியர் வீதிச் சந்தி, ஐயனார் கோவிலடி, கைலாசப்பிள்ளையார் கோவில், கலட்டி பிறவுண்வீதி, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதிச் சந்தி, மனோகரா நாவலர் வீதி, மாவடி, நாச்சிமார் கோவிலடி, நல்லூர் கோயில், நாவலர் வீதி, இராவின் தோட்டம், மணிக்கூட்டு கோபுர வீதி, நீராவியடி, பருத்தித்துறை வீதி, றக்கா வீதி, சுண்டிக்குளி, இராமநாதன் வீதி, புகையிரத குறுக்குச் சந்தி, தட்டா தெரு கே.கே.எஸ்.வீதி சந்தி, அவுனோர் பிறைவேற் லிமிட்டெட், தம்றோ, ஞானம்ஸ் விடுதி, ஹற்றன் நஷனல் வங்கி (மின்சார நிலைய வீதி), ஐபிசி தமிழ், LOLC, நொதேர்ன் மருத்துவமனை, மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, ராஜா தியேட்டர், சூரிய உதயம் (வீனஸ் மருத்துவமனை), போதனா மருத்துவமனை அவசர பிரிவு, பி.சி.சி.ஏ.எஸ். கல்லூரி, கஜமுகன் வன் பொருள் வளாகம், கமலேஸ்வரி, லதுசியாந்த் விடுதி, லிங்கம் கிறீம் ஹவுஸ், என்.எஸ்.ஆர். வளாகம், பலாலிவீதி, சிவன் அம்மன் வீதி சந்தி, சிவராதா புடைவையகம், றொப்பாஸ் மற்றும் அன்னை நாகா பூட் சிற்றி, கந்தர்மடம், ஆரியகுளம்- பருத்தித்துறை வீதி, பேருந்து நிலையம், மணிக்கூட்டு கோபுர வீதி, ஸ்ரான்லிவீதி, இலுப்பையடிச் சந்தி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதிச்சந்தி, பேருந்து நிலையம், பலாலி வீதி, பிஸாஹட் மற்றும் ஐபிசி தமிழ், ஆனைப்பந்தி, மின்சார நிலைய வீதி, றொசல் கட்டடம், வெலிங்டன் சந்தி, சிவராஜா அவெனியூ, பலாலி வீதி, ஆரியகுளம் சந்தி, விக்டோரியா வீதி, விலிங்டன், வின்சர், யாழ். மருத்துவமனை- பலாலி வீதி, மருத்துவபீட அரங்கம், மருத்துவபீடம், நெதேர்ன் இன்டஸ்ரீஸ், கொக்குவில், மாவடி, திருநெல்வேலி, பிரம்படி, கொக்குவில் சைலோ,- கோயில் வீதி, கொமர்ஷல் வங்கி- பலாலிவீதி பனிக்கர்லேன் சந்தி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி சந்தை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 681 ஆம் பிரிவு, இராணுவமுகாம், முள்ளிவாய்க்கால், கடற்படை முகாம் (வட்டுவாகல்), முள்ளிவாய்க்கால் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** ஆத்திமோட்டை பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும். (5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## வாழ்க்கையின் இரகசியம்

❖ உடல், மனம், அறிவு மூன்றையும் பலவீனமாக்கும் எதையும் நஞ்சென்று ஒதுக்கி விடுங்கள்.

❖ வஞ்சனையால் எதையும் உலகில் சாதிக்க இயலாது. அன்பும் உண்மையும் இருந்தால் பெரிய செயலைக் கூட எளிதாக செய்து விடலாம்.

❖ இந்த பரந்த உலகில் பிறந்திருக்கும் நீங்கள், அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லாவிட்டால், உங்களுக்கும் சிறு கல்லுக்கும் கூட வித்தியாசம் இல்லாமல் போய்விடும்.

❖ பயமின்மையே வாழ்க்கையின் ரகசியம். பிறரிடம் இருந்து வரும் உதவியை ஏற்க மறுக்கின்ற அந்த கணமே நமக்கு சுதந்திரம் கிடைத்து விடும்.

❖ நியாயமான கோபம் என்ற ஒன்று எங்கும் கிடையாது. ஏனெனில், அனைத்தையும் சமமாகக் காணத் தவறுவதால் தான் ஒருவருக்கு கோபமே உண்டாகிறது.

❖ எண்ணங்களுக்கு நாம் உரிமை உடையவர்கள். நல்ல எண்ணங்கள் நம்மை நோக்கி வருவதற்காக உள்ளங்களைத் திறந்து வைக்க வேண்டியது நம் கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

65

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



| அட்டவணை 12 பெய்தல் அளவை வாய்பாடு | | |
|---|---|---|
| 360 நெல் | = | 1செவிடு |
| 5 செவிடு | = | 1ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | = | 1உழக்கு/சொம்பு |
| 2 உழக்கு | = | 1 உரி |
| 2 உரி | = | 1 படி (நாழி) |
| 8 படி | = | 1 மரக்கால் |
| 4 உழக்கு | = | 1 நாழி |
| 2 படி | = | 1 குறுணி (மரக்கால்) |
| 2 குறுணி | = | 1 பதக்கு |
| 2 பதக்கு | = | 1 தூணி |
| 2 தூணி | = | 8 குறுணி |
| 3 தூணி | = | கலம் |
| 12 மரக்கால் | = | கலம் |
| 5 மரக்கால் | = | பறை |
| 80 பறை | = | கரிசை |

**திருமண நிகழ்வு புதுமனை புகுவிழா, பூப்புனித நீராட்டு விழா என்பவற்றில் மங்கலகரமான ஒன்றாக "நிறைநாழி" எடுத்துச் செல்லப்படும். நாழி என்பது நெல் அளவிடப் பயன்படுத்தப்படும் ஒரு அளவையாகும். இந் நாழி எனப்படும் அளவுக் கொள்கலத்தினுள் நெல் நிரப்பி அதனுள் வெற்றிலை, தேசிக்காய் என்பவற்றையும் காம்புச் சத்தகம் எனப்படும் ஒரு வகைக் கத்தியையும் குற்றி வைப்பது நிறை நாழி எனப்படுகிறது.**

இவற்றை விட 3 பறை 1 மூடைக்கு (பொதிக்கு) சமன். 21 மரக்கால் 1 கோட்டைக்குச் சமன். 1 பொதி 120 படிக்குச் சமன். மேலும் பல அளவைகள் தமிழ் லெக்ஸிகனில் கொடுக்கப்பட்டுள்ளன. தானிய அளவைகளாகக் கடமைக்கால், கடன், கந்துகம், கரிசை போன்றன அமையதிரும், துடவு போன்றவை எண்ணெய்ப் பொருட்களை அளக்கப் பயன்பட்டன.

மேலும் பண்டைய தமிழர்கள் உப்பு, நெல், அரிசி போன்றவற்றைத் தலைச்சுமை, பாக்கம், பொதி, வண்டி என்ற அளவில் கணக்கிட்டு அளந்திருக்கின்றனர்.

தமிழ் நாட்டில் நாழி என்பது ஒரு படி அளவையும் குறித்தது. அதில் கால் பங்கு அளவான காற்படியையும் குறித்தது. இது ஒரு சில இடங்களில் உரியும் ஒரு சில இடங்களில் படியையும் நாழியென்கின்றனர்,

### நிறைநாழி

திருமண நிகழ்வு, புதுமனை புகுவிழா, பூப்புனித நீராட்டு விழா என்பவற்றில் மங்கலகரமான ஒன்றாக "நிறைநாழி" எடுத்துச் செல்லப்படும். நாழி என்பது நெல் அளவிடப்பயன்படுத்தப்படும் ஒரு அளவையாகும். இந்நாழி எனப்படும் அளவுக் கொள்கலத்தினுள் நெல் நிரப்பி அதனுள் வெற்றிலை, தேசிக்காய் என்பவற்றையும் காம்புச் சத்தகம் எனப்படும் ஒரு வகைக் கத்தியையும் குற்றி வைப்பது நிறை நாழி எனப்படுகிறது.

### ஒரு முட்டை நெய்

சிறிய அளவு என்ற நிலையில் நெய் போன்றன அளக்க 'சூலம்' 'பதம்' போன்ற அளவுகளும் இருந் தன. இவற்றைவிட 'முட்டை' என்ற அளவும் இருந்தது. 1 முட்டை நெய் எனில், ஒரு சிறுகுழி கரண்டி நெய்யாகும்.

ஒரு நுங்கின் கண் ணினை இரண்டாக வெட்டி அக் கண் பாகத்தை அளவாகக் கொண்ட தொரு அளவையை முட்டை அள வாகச் சுட்டி வந்துள்ளனர் என "தமிழர் அளவைகள்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

தஞ்சைப் பெருவுடையார்கோயில் கல்வெட்டில் இராஜராஜசோழன் தான் கொடுத்த தானப் பொருட்கள் பட்டியலில் "நெய் முட்டை ஒன்று வெள்ளி என்பத்து எழுகழஞ்சு" என்பதைக் காண முடிகிறது. இது நெய் விடும் சிறு வெள்ளி கரண்டிகள் எனப் பொருள் படுகிறது.

### கொத்து, சுண்டு அளவுகள்

இலங்கைத் தமிழர்களிடையே பின்வரும் அளவைகள் வழமையில் உள்ளன. அவை நாலு சுண்டு நெல்லு = ஒரு கொத்து. பத்து கொத்து = ஒரு மரக்கால், 28 கொத்து = ஒருபுசல், 3 புசல் = 1 சாக்குமூடை.

**சிறங்கை (உள்ளங்கையளவு), சிட்டிகை போன்ற அனுமான அளவுகள் தற்போதும் பாவனையில் உள்ளன.**

### அனுமான அளவுகள்

தமிழ் லெக்ஸிகன் சுட்டும் பல அனுமான அளவுகளும் உள்ளன. இவை முகத்தல் அளவை தொடக்க காலந் தொட்டு, மரபாக மக்களிடையில் பயன்படுவது குறிப்பிடத்தக்கது. சிறங்கை (உள்ளங்கையளவு), சிட்டிகை போன்ற அனுமான அளவுகள் தற்போதும் பாவனையில் உள்ளன. 1 பிடி அரசி, 1 பிடி சோறு போன்ற வற்றையும் இங்கு குறிப்பிடலாம். திருமந்திரத்தில் அமையும் "யாவர் க்குமாம் உண்ணும் போதொரு கைபிடி" அன்றைய நிலையைத் தெளிவாக்கும்.

### கையால் எடுத்தலளவை (முகத்தல் அளவை)

பருமனைக் குறிக்கவும் அந்தக் காலத்தில் பருமனைக் குறிக்க மனிதர்கள் தன் உடல் உறுப்புகளைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். மிக நுட்பமான பொருளைப் பற்றிப் பேசும் போது "கண்ணுக்குள்ள போட்டு எடுத்திடலாம்" என்று கண்ணை மையமாக வைத்துக் கூறினார்கள். அதைவிட சற்று பருமனான பொருளை ஒரு சிட்டிகை என்று கூறினார்கள். பெருவிரலும் ஆள் காட்டிவிரலும் சேர்ந்து ஒட்டிப்பிடித் துக் கொண்டு எடுக்கும் 'பொடி' போன்றவைகளைச் சிட்டிகை என்று கூறினார்கள். உள்ளங் கையைக் குவித்து அதில் நெல் மணி போன்ற வற்றை நிரப்பி, ஒரு கையளவு அல் லது 'ஒரு சதங்கை' அல்லது ஒரு சிறங்கை என்றார்கள்.


இரண்டு கையையும் சேர்த்து நெல் மணிகளை அள்ளி 'இருகை அளவு' என்றார்கள். சோற்றை உள்ளங்கையில் வைத்து உருட்டி ஒரு 'கவளம்' என்றார்கள்.

ஒரு 'வாய்ச்சோறு' என்றும் ஒரு அளவைக் கூறினார்கள். இவையெல்லாம் எடுத்தல் அளவைக்குள் அடங்கும். இதுபற்றி கீழே பார்ப்போம்.




முகத்தல் அளவைக் கருவிகள்

படம் 4 கையால் எடுத்தலளவை




1.திருடிகை 2. சிட்டிகை 3. சிறங்கை 4. கைபிடி 5. கைப்பாங்கு 6. குத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்...)

## தமிழ் மக்களை...

நாம் இப்போது என்ன செய்தோம் என்று தெளிவாக கூற வேண்டிய பொறுப்பு உள்ளது. புதிய அரசியல் அமைப்பு வருமா? வராதா? என்று உறுதியாக கூறமுடியாது. அப்படி வந்தாலும் அதில் சிங்கள, பௌத்த மேலாதிக்கம் மட்டுமே அதில் இருக்கும்.

இது மட்டும் உறுதி. ஏனென்றால் இது தான் நடந்தது. எமது கடந்தகால அனுபவம் இது. இந்திய இலங்கை ஒப்பந்தம் ராஜீவ் காந்தி காலத்தில் எழுதப்பட்ட போது தமிழ் மக்களின் தீர்வு தொடர்பில் அன்று வாக்குறுதி எமக்கு வழங்கப்பட்டது. அதன் உரித்து இந்தியாவுக்கு இருக்கிறது என்பதன் அடிப்படையிலேயே நாம் மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் முழுமையான பிரச்சினைக்கு தீர்வு தரும் என்று ஒரு நாளும் கூறவில்லை. ஏற்றுக் கொள்ளவும் இல்லை.

ஒன்றுமே இல்லாமல் இருக்கும் இடத்தில், சட்டரீதியாக அமுல்படுத்துமாறு கூறிய 13 ஆவது திருத்தத்தை முதலில் அமுல்படுத்தினால், அதில் உள்ள சிறிய விடயங்களை என்றாலும் நாம் பெறுவதற்கு முயற்சிக்கலாம். ஒன்றுமே இல்லாமல் இருக்கும் இடத்தில் இருக்கிறதை என்றாலும் நாம் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்றார். (ம-18,33,104)

## முன்னணி...

அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நல்லூர் ஆலய முன்றலில் மேற்படி பேரணி ஆரம்பமாகவுள்ளது.

மேலும் 13 ஆவது திருத்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்துள்ள வாகன பேரணி நேற்று மதியம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

குறித்த வாகனப்பேரணியானது நேற்று காலை கிளிநொச்சியில் இருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளது.

இதன்போது தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை 13ஆம் திருத்தத்திற்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிக்க அனைத்து தமிழ் மக்களதும் பூரணமான ஆதரவை கோரி துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டது.

வாகனப்பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணிகளான ந.காண்டீபன், க.சுகாஸ், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-18,30,33,104)

## ஒற்றையாட்சி...

கொண்டு வரவேண்டும் என்றார்.

**சுரேஸ் பிரேமச்சந்திரன்**

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மக்கள் மத்தியில் போலிப் பிரசாரத்தினை மேற்கொள்வதுபோல நாங்கள் 13 ஆவது திருத்தச்சட்டத்தை தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் கோட்டாபய அரசாங்கம் எதைச் செய்ய நினைக்கிறார்களோ அதனை வடக்கில் நிறைவேற்றுகிறார்கள். அதாவது தற்போது அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு வடக்கின் முகவர்களாக செயற்படுகின்றார்கள் என்றுதான் கூற வேண்டும். குறிப்பாக ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய போட்டியிடும்போது வடக்கு மக்களின் வாக்களிப்பு எனக்கு தேவையில்லை. ஆனால் தேர்தலை புறக்கணியுங்கள் என்று கூறியிருந்தார். அதனையே அந்த தேர்தலின்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் செய்திருந்தார்கள். அதாவது அந்த தேர்தலை புறக்கணிக்குமாறு கூறியிருந்தார்கள். தற்போது கோட்டாபய கூறுகின்றார் 13ஆவது திருத்தம் தேவையில்லை. அபிவிருத்தி மட்டும் போதும். அதேபோல் அரசாங்கத்தில் உள்ளவர்களும் அதனை கூறுகின்றார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரும் வடக்கில் அந்தக் கோரிக்கையை னையே செயற்படுத்துகின்றார்கள் என்றார்.

**மாவை சேனாதிராசா**

சமஷ்டி கட்டமைப்பில், சுயநிர்ணய தீர்வைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம். நாங்கள் தெளிவாக சிந்தித்து இந்த முடிவை எடுத்துள்ளோம். ஒரு நாளும் 13ஆவது திருத்தம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வினை தராது. அதிலும் நாம் தெளிவாக இருக்கின்றோம்.

இந்த நிலையில் ஒரு கட்சி எமக்கு எதிராக பிரசாரம் செய்வதாக நினைத்து, தமிழ் மக்களை குழப்புவதற்காக பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளது. நாம் இந்தியாவுக்கு சோரம் போகமாட்டோம். இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாம் அவர்களிடமிருந்து பெற வேண்டியதை பெறுவோம் என்றார்.

**சித்தார்த்தன்**

மக்கள் மத்தியில் பொய் சொல்வதற்கு தகுதி வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தினை நாங்கள் தீர்வாக ஏற்றுக் கொண்டுள்ளோம் என கஜேந்திரகுமார் அணியினர் பொய் பிரசாரம் மேற்கொண்டுள்ளார்கள்.

அவ்வாறு பொய் பிரசாரம் மேற்கொள்பவர்கள் என்ன தீர்வினை முன் வைக்கப் போகிறார்கள் அல்லது தீர்வு விடயத்தில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று கூறமுடியுமா? ஏன் அவர்கள் இவ்வாறு செயற்படுகிறார்கள் என தெரியவில்லை.

அத்தோடு கஜேந்திரகுமார் அணியினர் எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் போட்டியிடவுள்ளார்கள். யாரை முதலமைச்சராக முற்படுத்துவது என்பதில் தொடர்பில்கட்சிக்குள்போட்டி நிலை காணப்படுகின்றது. அவ்வாறான நிலையில் ஏன் இவ்வாறு மக்களை குழப்பும் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள் என நான் கேட்க விரும்புகின்றேன்.

அவர்களது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் அதாவது தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர்கள் என்ன தீர்வினை முன் வைத்திருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியுமா?

அவர்களுடைய தீர்வு ஒற்றையாட்சிக்குள் அமைகின்றது. எனவே மக்களை இனியும் அவர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. மக்களுக்கு நன்கு விளங்கும் இவர்கள் பொய்யுரைக்கின்றார்கள் என தெரிவித்துள்ளார். (ம-18,33,104)

## அறிகுறியற்ற...

இதனைக் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் சமூக பரவல் மட்டத்தில் இல்லை என்பதை தெளிவாக கூற முடியாது.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த சுகாதார நடைமுறைகளை விடாமுயற்சியுடன் பின்பற்றினால், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை வழமை போன்று கொண்டாட முடியும் என்றார். (ம)

## சட்டத்திருத்தத்...

நில் இதனைக் கூறியுள்ளார்.

சர்வதேச தரத்துக்கு அமைவாக உள்நாட்டின் சட்டதிட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

சட்டத்திருத்தத்தின் ஊடாக சட்ட அமுலாக்கத்தின் வழக்கங்களும் மாற வேண்டும் என்றும் இதற்கான ஒத்துழைப்பு ஐக்கிய நாடுகளிடம் இருந்து எப்போதும் கிடைக்கும் என்றும் அவர் தனது ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார். (ம)


மெகா பவர்
திகதி 28/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1009
Z 22 17 36 54 72
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 09534

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.01.28
சீட்டிழுப்பு இலக்கம் 002
சிம்மம் 09 16 23 59 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/01/28
சீட்டிழுப்பு இலக்கம் 4661
R 4 8 0 2 8 4
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 28.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2956
C 42 64 65 72
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.01.28
சீட்டிழுப்பு இலக்கம் - 691
K 03 18 30 54

வாசனா சம்பத
1690 திகதி 2022.01.28
B 49 54 80 88
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1464
சீட்டிழுப்பு திகதி: 2022.01.28
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,079,160/-
12 17 62 65 S
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.01.28
சீட்டிழுப்பு இல: 3799
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,829,020/-
வெற்றி இலக்கங்கள் 04 05 57 68 C
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 127
சீட்டிழுப்பு திகதி 28.01.2022
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 26 32
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,245,320/-

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது.
ரூ. 2,833,998/-
வெற்றி இலக்கங்கள் 15 21 34 43
திகதி 2022-01-28
வெற்றி வாரம் 3350
வர்ணம் நீலம்
27671
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 67,219,918/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 21 51 55 56 63
சீட்டிழுப்பு வாரம் 814
2022.01.28 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 208,075,369/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1638
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022 / 01 / 28
தினம் வெள்ளி
K 12 18 56 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 56,689,880/-

நாகபூசணி அருளுடன்
25 நாட்களில் 5 இலட்சங்கள் (மூன்று) யாழ். நகரில் வெல்லப்பட்டன !
ராசி சுபபலன் (கந்தகன) அறிமுக லொத்தரில் 27.01.2022 தனது முதலாவது 5 இலட்சம் NLB
ராசி அதிர்ஷ்டம் கடந்த வாரங்களில் 5 இலட்சங்கள் 2 DLB
லொத்தர் சீட்டுக்கள் தொடர்ந்து வெல்லப்படுகின்றன. பரிசுகளை அள்ளிச் செல்ல சீட்டுகளை வாங்குங்கள். இலக்கங்களை சரிபாருங்கள்.
50இற்கும் அதிகமான லொத்தர் சீட்டுகள் பெற்றுக்கொள்ள 077 213 4460
யாழ். முகவர் கனலிங்கம் நிலையம்
இல. 04, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (9891)

# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு:-
021 221 7603, 021 567 1532



## வேலை வாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel and Indian Restaurants இற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- வரவேற்பாளர்
- Weighter
- House - keeper

(9889)

**077 077 7775**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கந்தர்மடம் சந்தி மணத்தறை வீதியில் அமைந்துள்ள 3 பரப்பு 4.55 குளி கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. (9864)

**077 229 4985**
**076 178 7326**


## 17 பேர்...

மூந்துள்ளவர்களில் 10 ஆண்களும் 07 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15, 386 ஆக உயர்வடைந்துள்ளது.(ம)

## +961...

உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 608,065 ஆக அதிகரித்துள்ளது. (ம)


## வரவேற்பாளர்கள் தேவை

யாழ். நகர் மத்தியில் அமைந்துள்ள் உல்லாச விடுதி ஒன்றில் கடமையாற்ற வரவேற்பாளர்கள் தேவை.

சிங்களம், ஆங்கிலம் பேச, எழுத தெரிந்திருக்க வேண்டும். (9901)

**077 634 1525**
**077 821 0122**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (9895)

**077 814 7389, 077 614 7333**



## ஆசிரியர்கள் தேவை

தெல்லிப்பளைச் சந்திக்கு அருகாமையில் ஆரம்பமாக இருக்கின்ற புதிய கல்வி நிலையம் ஒன்றிற்கு தரம் 6 - 11 வரை கணிதம், விஞ்ஞானம், தமிழ் உட்பட சகல பாடங்களும் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். (9879)

**077 834 3666**



## பௌதிகவியல் (Physics)

2022, 2023 உயர்தர மாணவர்களிற்கான விசேட தனி, குழு வகுப்புக்கள் (Personal and Group Classes) (9886)

**076 157 0107**



## அகரம் உயர் நிலைக் கல்லூரி

**AHARAM HIGH STANDARD COLLEGE**

காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

**புதிய கல்வியாண்டு - 2022 ஆரம்பம்**

தரம் 06 - O/L
வரையான தமிழ் மொழி மூலம்
English medium வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(22.01.2022 இல் புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய தரம் 06 தமிழ்மொழி மூல English medium வகுப்புக்கள் ஆரம்பம்

04.02.2022 [வெள்ளிக்கிழமை]
வளர்பிறை விநாயக சதுர்த்தி அன்று காலை 6.35 - 8.05
வரையான சித்தயோக நன்நாளன்று

அனுமதிகளை 26.01.2022 மாலை 02 மணியில் இருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

(9887)

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர்



முதலாம் ஆண்டு

# நினைவலைகள்



மலர்வு
11.04.1945

உதிர்வு
08.02.2021

## அமரர் பரமேஸ்வரி தனபாலன்

நம்ப மறுக்கிறது நெஞ்சம்
நகர்ந்ததுவோ ஓராண்டு
தரணியில் எமக்கொரு தனித்துவத்தை
தந்த எம் தாயே
ஏணியாய் நின்று எம்மை
உயர்த்திவிட்டீரே
கடைசிவரை உங்கள்
பூமுகத்தை தன்னும் பார்க்கமுடியவில்லையே
எம் பாசமிகு தாயே தவிக்கின்றோம்
உமை இழந்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாச்சிமார் கோவில் வீதி,
சரவணை. 077 768 6713 (9910)

மகன், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



29ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



அமரர்

## இ.ச.பேரம்பலம் ESP

(வாரிவளவு - காரைநகர்)
திதி : துவாதசி (29.01.2022)

வணிகத்துறையில் வழிகாட்டியாய் நின்று
எம் வாழ்வில் ஒளியேற்றிய அன்புத் தெய்வமே
உங்கள் பொன்வதனமும் புன்சிரிப்பும்
நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
எம் நெஞ்சங்களில் நீங்காது நிழலாடுகின்றன.

தொழிலில் நேர்த்தியும் நேர்மையும் நன்மதிப்பும்
என்றும் அழியாச் சொத்தாய் விட்டுச் சென்றீர்கள்.
நீங்கள் மறைந்து ஆண்டுகள் இருபத்தொன்பதான போதும்
நீங்காது எம் நெஞ்சங்களில் நிலைபெற்று விட்டீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல
வாரிவளவு கற்பக விநாயகர் பாதங்களைப்
பணிந்து பிரார்த்தித்து நிற்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

383, மணிஓசை,
கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

கல்விக்காருண்யன்
கலாநிதி லயன் E.S.P. நாகரத்தினம் (PMJF)
குடும்பத்தினர் (9810)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org